தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஒ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 190/மா/2026
நாள்: 07.10.2026

ர. சாஜித் பாஷா,
சென்னை–600 029. --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர், மண்டலம்–8,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 029, அமைந்தரை, மஞ்சக் கொல்லை தெரு, கதவு எண் 45/28 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ர. சாஜித் பாஷா என்பவரின் 10.12.2024 மற்றும் 18.05.2026 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் முறையே 11.12.2024 மற்றும் 19.05.2026 ஆகிய தேதிகளில் பெறப்பட்டு 190/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–600 029, அமைந்தரை, மஞ்சக் கொல்லை தெரு, கதவு எண் 45/28 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ர. சாஜித் பாஷா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 10.12.2024 மற்றும் 18.05.2026 நாளிட்ட மனுக்களில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

10.12.2024 நாளிட்ட மனு:–

"நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். மேலும் சமூக ஆர்வலராகவும் இருந்து வருகிறேன். நான் வசிக்கும் தெருவில் M. வெங்கடேசன் என்பவர் பழைய எண் 49 மஞ்சக் கொல்லை தெருவில் இருக்கும் பிரிக்கப்படாத சொத்தில் ஒரு பகுதியை வாங்கி அதில் வீடு கட்டினார்.

அது மூன்று மாடிகள் கொண்ட கட்டிடம் ஆகும். அதற்கு கட்டிட திட்ட அனுமதி உள்ளதா என்பதும் சந்தேகம் உள்ளது. அவர் கட்டிய கட்டிடத்திற்கு எண் 49`A' என்று குறிப்பிட்டு இருந்தது. இதில் சந்தேகம் அடைந்த நான் இந்திய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கேட்டதற்கு அதற்கு பதில் அளித்த பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் "கணினி பதிவுறுகளில் எண் 49`A' என்ற மஞ்சக் கொல்லை தெரு என்ற முகவரி இல்லை" என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று பதில் அளித்து இருந்தார்.

மீண்டும் நான் தகவல்கள் கேட்டு மனு அளித்தேன். அதற்கு பதில் அளித்த பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் 49`A′ என்ற கட்டிடம் சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாததால் வரிவிதிப்பு செய்ய இயலவில்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று பதில் அளித்தார். இதில் மேலும் சந்தேகம் இருந்ததால் நான் மீண்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் கேட்டதில் மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் அளித்த பதிலில் ஒரே ஒரு வரி மதிப்பீடு உள்ளது என்றும், அதன் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்று 22.04.2022 தேதியிட்ட பதில் கடிதம் வாயிலாக பதில் அளித்திருந்தார்.

ஆனால் கடந்த 10.07.2018 அன்று வெங்கடேசன் சமர்ப்பித்த "சொத்துவரி" மதிப்பீடு செய்ய அளித்த ஆவணங்களின் அம்மனுவில் என்ன கொடுத்துள்ளார் என்பதும் சந்தேகம் உள்ளது. மேலும் பகுதி–8 சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தில் கடந்த 2021–ல் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் கேட்டு விண்ணப்பித்த போது அதற்கு பதில் அளித்த பகுதி பொறியாளர்–8 அவர்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு கொடுக்க என்னென்ன ஆவணங்கள் பெறப்பட்டது என்று கேட்டதற்கு "குடும்ப நுகர்வோர் அட்டை மட்டும் போதுமானது" என்று தெரிவித்து இருந்தார். மேலும் கட்டிட அளவீடு சான்றிதழும் பெறப்படவில்லை எனறும் பதில் அளித்து இருந்தார். காரணம் கடந்த 10.07.2018–ல் வெங்கடேசன் என்பவர் 49`A′ என்ற கட்டிடத்தில் வசிக்கவில்லை. அவர் அளித்த "குடும்ப நுகர்வோர் அட்டை"யும் போலியானது. அவர் வேறு தெருவில் வசித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் வெங்கடேசன் என்பவர் பெயரில் மின் இணைப்பு உள்ளதா அல்லது பழைய உரிமையாளர் பெயரில் உள்ளதா என்றும் சந்தேகம் உள்ளது.

இது சம்பந்தமாக நான் உயர்திரு. உள்துறை செயலாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனுவில் (22.02.2024) குறிப்பிட்டு எழுதி அனுப்பினேன். அவர் மண்டலம்–8 பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மூலமாக உத்தரவிட்டிருந்தார். ஆனால் வழக்கம் போல் மண்டலம்–8 பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கிடப்பில் போட்டார்கள்.

இதுபோன்ற முறைகேடுகளை செய்து 49`A′ என்ற கட்டிடத்தில் எழுதி இருந்த கதவெண்ணை நீக்கம் செய்து எதுவும் தெரியாமல் இருக்க கட்டிட உரிமையாளர் வெங்கடேசன் செய்துள்ளார். எனவே மதிப்பிற்குரிய செயலாளர் ஆகிய தாங்கள் இந்த 49`A′ என்ற எண் கொண்ட மூன்று மாடி கட்டிடம் மீதும் அதனை முறையாக வரி செலுத்தாமல் இருக்கும் கட்டிட உரிமையாளர் மீதும், மேலும் இந்த கட்டிடத்தின் மின் இணைப்பை எதன் அடிப்படையில் கொடுத்துள்ளார்கள். இந்த மின்சார வாரிய அதிகாரிகள் என்பதனை விசாரணை செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மண்டலம்–8, வருவாய்த் துறை, மின்சார வாரியம் அதிகாரிகள் விசாரணை செய்து இதில் தவறு நடந்திருப்பது உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் கட்டிடம், மற்றும் கட்டிட உரிமையாளர் வெங்கடேசன் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த புகார் மனுவின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் எந்த புகார் மனு அளித்தாலும் மண்டலம்–8 பெருநகர சென்னை மாநகராட்சியை பொறுத்தவரையில் நடவடிக்கை எடுப்பது கிடையாது. நீதிமன்றம் சென்று நீதிமன்ற உத்தரவை பெற்றும் அதனை நிறைவேற்றாமல் காலதாமதம் செய்வதும் இந்த அலுவலகத்தில் நடக்கும். ஏனென்றால் இதே வெங்கடேசன் "அஸ்திவாரம்" இல்லாமல் கட்டிய கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க கடந்த 24.09.2020–ல் புகார் மனு அனுப்பினேன். பெயருக்கு NOTICE அனுப்பிவிட்டு கிடப்பில் போட்டதால், மாண்பமை

சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து (W.P. 7781/2023) அதன் மீது உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை விசாரணை அதிகாரி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் இன்றைய தேதி வரை அந்த "கட்டிடத்தை" இடிக்காமல் வெறும் "சீல்" வைத்துவிட்டு சென்றார்கள். அதுவும் ஓராண்டு கழித்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 15.03.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை 14.03.2024 மற்றும் 10.06.2024 ஆகிய தேதிகளில் நிறைவேற்றார்கள். முறையாக உத்தரவை நிறைவேற்றவில்லை என்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளேன். (CONT. PET: 20105/2024).

எனவே மரியாதைக்குரிய செயலாளர் அவர்கள் சம்பந்தப்பட்ட 49`A' எண் கொண்ட மூன்று மாடி கட்டிடம் முறையாக அனுமதி பெற்று கட்டப்பட்டதா என்றும் இந்த முறைகேடுகளுக்கு காரணமாக இருந்த மண்டலம்–8 வருவாய்த் துறை அதிகாரிகள் மீதும் விசாரணையில் உறுதி செய்யப்பட்டால் அவர்கள் மீதும் அந்த கட்டிட உரிமையாளர் வெங்கடேசன் மீதும் நடவடிக்கை எடுத்து சென்னை மாநகரில் இது போன்ற சட்ட விரோத கட்டிடங்கள் உருவாகாமல் இருக்க உரிய உத்தரவை மரியாதைக்குரிய செயலாளர் அவர்கள் பிறப்பிக்க வேண்டும் என இந்த புகார் மனுவின் வாயிலாக பணிவுடன் தங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்."

2. மனுதாரரின் மேற்கண்ட புகார் மனுவில் சென்னை, அமைந்தகரை, மஞ்சக்கொல்லை தெரு, கதவு எண்.49`A'–ல் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டியது தொடர்பாக வழக்கு எண்.W.P.7781/2023–ல் தொடரப்பட்ட வழக்கின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், Contempt Petition எண் 20105/2024 தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்கண்ட வழக்கின் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு நகல் மற்றும் Contempt Petition எண் 20105/2024–ன் நகல் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ 18.02.2025 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரை அறிவுறுத்தப்பட்டது.

3. மனுதாரர் தன்னுடைய 27.02.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"நான் கடந்த 10.12.2024 அன்று கதவெண் 49–ல் உள்ள பிரிக்கப்படாத சொத்தில் ஒரு பங்கை வெங்கடேசன் என்பவர் வாங்கி அதை முறையாக பத்திரம் பதிவு செய்யாமல் மூன்று மாடிகள் கொண்ட கட்டிடம் கட்டி அதை வாடகைக்கும் விட்டு அவரும் அதில் குடியிருக்கிறார். அந்த வீட்டிற்கு கதவெண் 49`A' என்று குறிப்பிட்டு இருந்தார். இது சம்பந்தமாக சந்தேகம் அடைந்த நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் உதவி வருவாய் அலுவலர் மண்டலம்–8 பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களிடம் தகவல் கேட்டு மனு அளித்ததில் அது போன்ற 49`A' என்ற கதவெண் கொண்ட கட்டிடத்தின் விவரங்கள் எதுவும் இல்லை என்றும் அதனுடைய பழைய கதவெண் 49–ன் சொத்துவரி உரிமையாளர்கள் சதானந்தன் மற்றும் ஜெயந்தி என்றும் தகவல் அளித்தார்.

ஆனால், வெங்கடேசன் கடந்த 10.07.2018–ல் சொத்துவரி மதிப்பீடு செய்யவும் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கும் மண்டலம்–8 வருவாய்த் துறையில் மனு அளித்து உள்ளார். இதன் நகலை நான் 10.12.2024 தேதியிட்ட புகார் மனுவில் இணைத்துள்ளேன். மேலும் இதற்கு "சொத்துவரி"(49`A') கட்டிடத்திற்கு போடப்பட்டுள்ளதா என்பதும் சந்தேகம் அளிக்கிறது.

மேலும் இந்த கட்டிடத்துக்கு மின் நுகர்வோர் பெயர் யார் பெயரில் உள்ளது என்பதும் சந்தேகம் அளிக்கிறது. காரணம் வெங்கடேசன் பெயரில் இருந்தால் அதற்கு முறையான ஆவணம் இருக்க வேண்டும். ஆனால் கதவெண் 49`A′ எண் கொண்ட கட்டிடத்தின் விவரங்கள் அலுவலகத்தில் இல்லை என்று உதவி வருவாய் அலுவலர் கூறியிருக்கிறார்.

இந்த முறைகேடுகள் நடந்துள்ள கட்டிடத்தின் முகவரியினை தங்களுக்கு குறிப்பிட்டு காட்டவே நான் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அதிகாரிக்கு அவர் ஏற்கனவே முறைகேடாக கட்டிய "அஸ்திவாரம்" இல்லாத கதவெண் 47/22 எண் கொண்ட மஞ்சக் கொல்லை தெருவில் இருக்கும் கட்டிடத்திற்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் "சீல்" வைக்கப்பட்ட கட்டிடத்திற்கு மீண்டும் மனு அளித்துள்ளார். அதில் 05.07.2024 மனுவில் 49`A′ மஞ்சக் கொல்லை தெரு என்று விலாசம் போட்டிருப்பார். இதனை தங்களின் மேலான கவனத்திற்காக கொண்டு வந்தேன். அதன் நகலும் இணைத்து கடந்த 10.12.2024 தேதியிட்ட புகார் மனுவில் அனுப்பினேன்.

மேலும் தாங்கள் கேட்டுள்ள நீதிமன்ற உத்தரவானது (W.P.7781/2023) இதே வெங்கடேசன் பழைய சிமெண்ட் ஓடுகளால் ஆன வீட்டை வாங்கி அதன் ஓடுகளை மட்டும் எடுத்து விட்டு "அஸ்திவாரம்" இல்லாமல் கட்டி கொண்டு வந்தார். அதன் கதவெண் 47/22, மஞ்சக் கொல்லை தெருவில் உள்ளது. அதுவும் அந்த கட்டிடம் இரண்டு அடி சிறிய சந்துப் பகுதியில் "அஸ்திவாரம்" இல்லாமல் கட்டப்பட்டது. அதன் பின்புறம் இரு குடும்பங்கள் வசிக்கிறது. ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் உயிர்சேதம் ஏற்படும் மீட்பு பணி நடைபெறுவதற்கு மிகவும் சிரமம் ஏற்படும் என்று நான் கடந்த 24.09.2020–ல் மண்டலம்–8, பெருநகர சென்னை மாநகராட்சியில் நடவடிக்கை எடுக்க புகார் மனு அளித்தேன். அதற்கு வெங்கடேசனிடம் மூன்று NOTICE களை அளித்தார்கள்.

மூன்றாவது NOTICE-ல் "DE-OCCUPATION AND LOCK AND SEAL" என்றும், அதனை ஏழு நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், 20.11.2020 தேதியிட்ட NOTICE-ல் குறிப்பிட்டிருந்தார்கள். வழக்கம் போல் அதிகாரிகள் அலட்சியமாக செயல்பட்டதால் வெங்கடேசன் தனக்கு ஒரு மாத கால அவகாசம் அளிக்குமாறும் தானே 47/22 எண் கொண்ட "அஸ்திவாரம்" இல்லாத கட்டிடத்தை இடித்து விட்டு முறையாக அனுமதி பெற்று கட்டுவதாகவும் APPEAL மனு 17.12.2020–ல் தாக்கல் செய்தார்.

ஒரு மாதம் கழித்து அவர் தனது 47/22 எண் கொண்ட கட்டிடத்தினை கட்டும் பணியினை தொடர்ந்து வந்தார். அதனை நான் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அதிகாரிகளிடம் புகார் அளித்தேன். வழக்கம்போல் அவர்களும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியத்துடன் இருந்ததால் நான் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தேன். அதில் உத்தரவு பிறப்பித்த மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அவர்கள் தீர்ப்பு கிடைத்த எட்டு வார காலத்திற்குள் சம்பந்தப்பட்ட 47/22 எண் கொண்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டனர். மேலும் வெங்கடேசன் தாக்கல் செய்த APPEAL மனுவையும் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டனர்.

மீண்டும் அவர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் மனு தாக்கல் செய்தால் அதனை நிராகரிக்கும் படி உத்தரவிட்டனர். விசாரணை அதிகாரி அவர்கள் ஒரு மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததால் நீதிமன்ற உத்தரவுக்கு பிறகு மூன்றாண்டுகள் கழித்து விசாரணை நடத்தி வெங்கடேசன் தாக்கல் செய்த APPEAL மனு (17.12.2020) தள்ளுபடி செய்து உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

மேலும் இந்த 47/22 எண் கொண்ட NOTICE அளிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மின் நுகர்வோர் பெயர் "துரை" என்பவர் பெயரில் உள்ளது. அதனை வெங்கடேசன் பெயருக்கு மாற்றம் செய்து உள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கேட்டதற்கு பதில் கிடைத்தது. மேலும் ONLINE–ல் "சொத்துவரி" தாக்கல் செய்ததால் பெயர் மாற்றம் செய்துள்ளதாகவும் சொல்லப்பட்டிருந்தது. வருவாய் துறையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கேட்டதற்கு "துரை" என்பவர் பெயரில் உள்ளது என்று தகவல் கிடைத்தது. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கக் கோரி அரசு தலைமைச் செயலாளருக்கு கடந்த 28.11.2024 அன்று புகார் மனு அனுப்பினேன். என்ன நடவடிக்கை மின்வாரிய அண்ணா நகர் செயற்பொறியாளருக்கு எடுத்துள்ளார்கள் என்றும் தெரியவில்லை.

இந்த வெங்கடேசன் என்பவர் தான் வாங்கும் சொத்துக்களை பத்திரப் பதிவு எதுவும் செய்ய மாட்டார். POWER OF ATTORNEY வாங்கி வைத்துக் கொண்டு அது முதல் தள கட்டிடமாக இருந்தால் அதன் பழைய உரிமையாளர் பெயரிலேயே வைத்துக் கொண்டு அதில் மூன்று மாடியோ அல்லது அதற்கு மேற்பட்டோ கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டு வருமானம் பார்த்து வருபவர். இது மண்டலம்–8 பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு தெரியும். காரணம் வெங்கடேசனிடம் பண பலமும், அடியாட்கள் மற்றும் அரசியல்வாதிகளின் பலமும் உள்ளது.

காரணம் 47/22 எண் கொண்ட "அஸ்திவாரமில்லாத" கட்டிடம் மீது நான் அளித்த புகார் மீதும் நீதிமன்ற உத்தரவு கிடைத்த பின்பும் என்னை பல வழிகளில் அச்சுறுத்தல்களும், மிரட்டல்களும் அடியாட்கள் மூலம் செய்தார். கடைசியாக 05.07.2024 தாக்கல் செய்த APPEAL மனு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் விசாரணைக்கு 29.08.2024 அன்று விசாரணையில் நான் அளித்த பதில் மனுவை வைத்து உத்தரவு பிறப்பித்து நடவடிக்கை எடுக்க கடந்த 28.10.2024 அன்று உத்தரவிட்டார். காலதாமதம் ஆகவே நான் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தேன். மேலும் அது பிரதான எண் இன்னும் கொடுக்கப்படவில்லை. பிரதான எண் (CASE NUMBER) ஆனபின் விசாரணைக்கு வரும்.

மேலும் என்னிடம் பல முறை அடியாட்களை தொடர்பு கொள்ள செய்து "நான் ஒரே ஒரு கையெழுத்து" போட்டு கொடுத்தால் போதும் என்றும் அதற்கு கேட்கும் பணம் கொடுப்பதாகவும் வெங்கடேசன் கூறியதாக அந்த அடியாட்கள் என்னிடம் கூறினார்கள். நான் அதற்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் விரைவில் இடிக்க போகும் கட்டிடம் அது என்னுடைய கையெழுத்து வைத்து கொண்டு என்ன செய்யப்போகிறார் என்று கேட்டதற்கு "உங்க கையெழுத்து இருந்தால் போதும் அதிகாரிகளை வைத்து கொண்டு "சீல்" திறந்து விடுவார் என்றும் கூறினார்கள். அப்போது தான் தெரிந்தது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு வந்தால் அதிகாரிகள் செய்த முறைகேடுகள் தெரிந்து விடும் தங்களின் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்ற எண்ணத்தில் நான் "வாபஸ்" பெறுவதாக கடிதம் எழுதி கொடுத்தால் போதும் என்று இவர்கள் கூறியிருப்பார்கள். காரணம் வெங்கடேசனால் பலன் பெற்றவர்கள் இந்த அதிகாரிகள்.

கடந்த 28.10.2024–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இன்னும் அந்த 47/22 எண் கொண்ட கட்டிடத்தை "இடிக்காமல்" காலதாமதம் செய்து வரும் மண்டலம்–8 அதிகாரிகள் மீது தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இந்த கட்டிடத்தால் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படுவதற்கு முன்பு இதனை இடிக்க தாங்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

அதேபோல் எனது 10.12.2024 தேதியிட்ட புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள 49`A' என்ற எண் கொண்ட மூனறு மாடி கட்டிடம் மீதும் அதன் உரிமையாளர் வெங்கடேசன் மீதும் நடவடிக்கை எடுத்து மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சட்ட ஆலோசகரும், செயலாளரும் ஆகிய தங்களிடம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் அளிக்கும் தீர்ப்பானது இதுபோன்ற சட்ட விரோத கட்டிடங்கள் கட்டும் உரிமையாளர்களக்கு பாடமாக இருக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோள் ஆகும்.''

4. மேலும் மேற்கண்ட மனுதாரரின் கடிதத்தில் வழக்கு எண் W.P. 7781/2023–ற்கான நகல் மட்டும் கிடைக்கப்பெற்றது. எனவே Contempt Petition எண் 20105/2024–ன் நகலை அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ 02.04.2025 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரை அறிவுறுத்தப்பட்டது.

5. இது குறித்து மனுதாரர் தன்னுடைய 02.05.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''நான் கடந்த 10.12.2024 அன்று கதவெண் 49`A' வரி ஏய்ப்பு கட்டிடம் சம்பந்தமான புகார் மனு ஒன்றை தங்களின் நடுவம் மன்றத்துக்கு அனுப்பியிருந்தேன். மேலும் அந்த கட்டிம் சம்பந்தமான முகவரி கொண்ட தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் அதே தெருவில் உள்ள ''அஸ்திவாரம்'' இல்லாமல் கட்டப்பட்டு நீதிமன்றத்தால் ''சீல்'' வைக்கப்பட்டு DEMOLISH காக உத்தரவு அளிக்கப்பட்ட 47/22 எண் கொண்ட கட்டிடம் சம்பந்தமாக சீராய்வு மனு தாக்கல் செய்த மனுவின் நகலினை இணைத்து அனுப்பினேன்.

அதற்கு தாங்கள் 47/22 எண் கொண்ட நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாமல் இருக்கும் கட்டிடம் சம்பந்தமான அனைத்து விவரங்களையும் கேட்டு கடித எண் 2518/மா/2024 கடிதம் வாயிலாக கேட்டு அனுப்பினீர்கள். நானும் அதன் விவரங்களை தங்களின் மேலான கவனத்திற்கு அனுப்பி வைத்தேன். CONTEMPT PETITION நீங்கலாக.

அதன் நகலினை தாங்கள் கேட்டு கடந்த 02.04.2025 கடிதம் வாயிலாக அனுப்பியுள்ளீர்கள். இந்த கடிதம் எனக்கு 29.04.2025 அன்று கிடைக்கப் பெற்றது. மேலும் கடந்த 11.04.2025 தேதியிட்ட புகார் மனுவினை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–8 அலுவலரிடம் நீதிமன்ற உத்தரவை இன்றைய தேதிவரை நிறைவேற்றாமல் உள்ளார்கள் என்றும், விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் புகார் மனுவினை நேரில் அளித்தேன். வழக்கம் போல் அதனை கிடப்பில் போட்டுள்ளார்கள் என்று நினைக்கிறேன். அந்த மனுவினையும் தங்களின் பார்வைக்கு அனுப்புகிறேன்.

இதனை தாங்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து ''அஸ்திவாரம்'' இல்லாமல் கட்டப்பட்டுள்ள 47/22 எண் கொண்ட நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாமல் இருக்கும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவினை நிறைவேற்றி தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனுக்களில், திரு. வெங்கடேசன் என்பவர் சென்னை, அமைந்தகரை, மஞ்சக் கொல்லை தெருவில் உள்ள வீட்டின் கதவு எண்கள் 47/22 மற்றும் 49`A' ஆகியவை அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள புகாரின் தன்மை குறித்து அறிக்கை அனுப்பி வைக்குமாறு 03.06.2025 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

7. இம்முறைமன்ற நடுவ 03.06.2025 கடிதத்திற்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் மண்டல அலுவலர் தன்னுடைய கடிதம் எண் Z.O.VIII.C.No.5111/2025 dated 10.07.2025–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"It is submitted that one Mr. R. Sajith Basha, has filed a complaint in Complaint No. 1518/Ma/2024-1 before the Tamil Nadu Local Bodies Ombudsman requesting the direct the officials of Greater Chennai Corporation to take action against the building at Door No.47/22, Manja Kollai Street, Aminjikarai, Chennai-600 029.

It is submitted that earlier the complainant herein had given a complaint requesting to take action against the unauthorized construction put up by Mr. M. Venkatesh at Door No.47/22, Manja Koillai Street, Aminjikarai, Chennai-600 029. Based on the said complaint the building in question was inspected and action was taken by issuing notices under the provisions of Tamil Nadu Town and Country Planning Act, 1971.

It is submitted that while so, the complainant herein had filed a Writ Petition in W.P. No.7781 of 2023 praying for issuance of a Writ of Mandamus, directing the respondents 1 & 2 herein to remove the unauthorized construction of the 3rd respondent herein built in Door No.47/22, Manja Kollai Street, Aminjikarai, Chennai-600 029.

It is submitted that the above Writ Petition was disposed by the Hon'ble High Court vide order dated 15.03.2023 as follows:

"... (5) From the above materials, it is seen that the 2nd respondent issued lock and seal notice dated 20.10.2020, followed by de-occupation notice dated 21.11.2020 to the 3rd respondent and subsequently, the 2nd respondent did not take any action. From the information furnished by the 1st respondent, it is seen that the 3rd respondent has filed appeal under Section 81 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 and seeks extension of time to modify the construction.

(6) Considering the above materials and notices issued by the 2nd respondent, it is seen that the construction put up by the 3rd respondent is unauthorised. In view of the same, the 2nd respondent is directed to take further action against the unauthorized construction put up by the 3rd respondent after issuing notice to the 3rd respondent. If any appeal filed by the 3rd respondent is pending before the 1st respondent, the 1st respondent is directed to consider the same and pass orders as expeditiously as possible, within a period of eight weeks from the date of receipt of a copy of this order.

(7) With the above directions, the Writ Petition is disposed of ....."

It is submitted that as per the above orders the Additional Secretary (Technical), Housing and Urban Development Department has considered the appeal filed by Mr. M. Venkatesh viz., the owner of the building in question and the same was dismissed vide Letter No.17959/UD 6/2020-4, dated 28.06.2023 as follows:-

"... (6) From the above, it is observed that the petitioner do not have ownership for the property. The petitioner has put up the unauthorized building on the temple land.

(7) The Government hereby dismiss the revision petition filed by Thiru M. Venkatesh under Section 80(A) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971, as the entire Ground Floor + First Floor building of the petitioner is unauthorisedly put up on the temple land. Greater Chennai Corporation is directed to take necessary further action in this regard...."

It is submitted that thereafter the building in question at Door No.47/22, Manja Kollai Street, Aminjikarai, Chennai-600 029, was locked and sealed by the officials of Greater Chennai Corporation on 14.03.2024 and till date the building is under lock and seal condition only.

It is submitted that aggrieved by the locking and sealing said Mr. M. Venkatesh has filed another Writ Petition in W.P. No.10369 of 2024 praying for issuance of a Writ of Mandamus to direct the respondents to de-seal the building at No.47/22, Manja Kollai Street, Aminjikarai, Chennai-600 029, to enable the petitioner to obtain planning permission from the respondents.

It is submitted that the Hon'ble High Court has passed and dismissed the above Writ Petition by order dated 17.04.2024 as follows:

"... (3) The order passed by the 1st respondent/Government is not under challenge before the Court. However, the petitioner has now come forward with this writ petition for issuance of a Writ of Mandamus to direct the respondents to de-seal the building to enable the petitioner to obtain planning permission from the respondents and for further orders. Even on the admitted facts, the petitioner's building, which is unauthorised, cannot be allowed to remain. When the petitioner has admitted before the 1st respondent even in the revision petition that the building was totally unauthorised and there was no planning permission, the petitioner's contention that the petitioner should be permitted to use the building even without an application being made for planning permission, is

ridiculous. The petitioner has put up a building consisting of Ground + 2 Floors. The counsel for the petitioner could only submit that there are several other constructions in the same vicinity without approval. The construction is by encroaching into public land. The petitioner cannot claim equality in illegality. Therefore, this writ petition is dismissed. Though this Court is inclined to dismiss the writ petition with exemplary costs, taking a lenient view, there is no order as to costs.

(4) The respondents are directed to take further action and report before this Court on 04.06.2024. Post the matter on 04.06.2024 under the caption "for reporting compliance".

It is submitted that thereafter said Mr. M. Venkatesh has filed a Review Petition before the Secretary to Government, Housing and Urban Development Department and the said Review Petition was also dismissed vide Letter No.7782504/UD 8(1)/2024-4, dated 28.10.2024.

It is submitted that further, the Hon'ble High Court has dismissed the above Writ Petition after reporting compliance by order dated 03.04.2025 as follows:

Today, this matter has been listed under the caption for 'reporting compliance'.

(2) Mr. D.B.R. Prabhu, the learned Standing Counsel for the Chennai Corporation would submit that the order of this Court has been complied with and the building is under sealed condition.

(3) Thus, no further orders are required.

It is submitted that the orders of the Hon'ble High Court is W.P. No.7781 of 2023, W.P. No.10369 of 2024, the orders passed by the Additional Secretary (Technical), Housing and Urban Development Department vide Letter No.17959/UD 6/2020-4, dated 28.06.2023 and Letter No.7782504/UD 8(1)/2024-4, dated 28.10.2024 and also the photographs taken at time of locking and sealing the building and present status of the building are annexed herewith for your kind perusal.

Hence, this Hon'ble Tribunal may be pleased to accept the report."

8. மனுதாரர் புகார் தெரிவித்துள்ள சென்னை, அமைந்தகரை, மஞ்சக் கொல்லை தெருவில் உள்ள வீட்டின் கதவு எண் 47/22–ல் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கான அறிக்கை மட்டும் அளிக்கப்பட்டு, மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள சென்னை, அமைந்தகரை, மஞ்சக் கொல்லை தெருவில் உள்ள வீட்டின் கதவு எண் 49'A'–ல் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடம் குறித்து அறிக்கை அனுப்பாததால், மேற்கண்ட கதவு எண் 49'A'–ல் உள்ள கட்டிடம் குறித்து அறிக்கை அனுப்பி வைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் மண்டல அலுவலரை 01.08.2025 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டது.

9. மேலும், மனுதாரர் தன்னுடைய 18.05.2026 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட புகாரினையும் தெரிவித்துள்ளார்:–

"நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். மேலும் சமூக ஆர்வலராகவும், பதிவு செய்யப்பட்ட ஜமாத்தில் RTI WING மாநில தலைவராகவும் இருந்து வருகிறேன். எனது வீட்டின் அருகே பழைய சுவற்றின் மீதே சிமெண்ட் ஓடுகளை மட்டும் அகற்றி விட்டு அஸ்திவாரம் இல்லாமல் சுமார் 70 அடி உயரத்துக்கு சிறிய இரண்டு அடி சந்துப் பகுதியில் கதவெண் 47/22 எண் கொண்ட மஞ்சக் கொல்லை தெருவில், வெங்கடேசன் என்பவர் கட்டி வந்ததை எதிர்த்து நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு 778/2023யின் மீது கடந்த 15.03.2023 அன்று எட்டு வார காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து அந்த கட்டிடத்தை இடிக்க உத்தரவு பிறப்பித்தார்கள்.

ஆனால் அதனை அதிகாரிகள் நிறைவேற்றாத பட்சத்தில் நான் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக அறிவிப்பு செய்த நிலையில் கடந்த 29.07.2025 அன்று அந்த கட்டிடம் இடிக்கும் பணியினை அதிகாரிகள் மேற்கொண்டார்கள்.

கட்டிடம் இடித்து முழுவதும் தரைமட்டமான பிறகு, மீண்டும் வெங்கடேசன் என்பவர் அந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதை ஆரம்பித்தார். இதனை கண்டித்து கடந்து 10.11.2025 அன்று நேரில் அளித்த புகாரின் மீது கட்டிடப் பணி பாதியில் நிறுத்தப்பட்டது. ஆனால் அந்த இடத்தினை வெங்கடேசன் என்பவர் ஆக்கிரமித்து "குடோன் போல உபயோகித்து வருகிறார்.

மேலும், அந்த இடமானது தற்போது வரை காலம் சென்ற துரை என்பவரின் பெயரில் சொத்து வரி செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் வெங்கடேசன் என்பவர் போலியான சொத்துவரி ரசீதினை தயார் செய்து மின் இணைப்பை தனது பெயரில் மாற்றம் செய்யப்பட்டு உபயோகித்து வந்ததை அறிந்து பல்வேறு கட்ட போராட்டங்களுக்கு பிறகு கட்டிடத்தை இடித்து முடித்த பின்னர் மின் வாரிய அதிகாரிகள் அந்த இணைப்பை துண்டித்து சென்றனர். மேலும் முறையான ஆவணங்கள் இல்லாமல் வெங்கடேசனோ அல்லது வேறு நபர்களோ அந்த இடத்தில் கட்டிடம் கட்ட விண்ணப்பம் செய்தால் அனுமதி அளிக்க வேண்டாம் என்று கடந்த 28.10.2025 அன்று வருவாய்த் துறை மற்றும் செயற்பொறியாளரிடம் ஆட்சேபனை மனுவினை நேரில் அளித்தோம். மேலும் இது சம்பந்தமாக பத்திரப் பதிவு துறையில் கடந்த 13.08.2025 அன்று "தடங்கல்" மனுவினை நேரில் அளித்தேன்.

இவை எல்லாம் இப்படி இருக்கையில் வெங்கடேசன் என்பவர் மீண்டும் அதே இடத்தில் நான்கு புறமும் சுவர்களை கட்டி தனது கட்டுப்பாட்டில் அதனை குடோனாக வைத்து உபயோகித்து வருகிறார். முறையான ஆவணங்கள் இல்லாமல் ஏற்கனவே அந்த கட்டிடம் நீதிமன்றத்தால் இடிக்கப்பட்டு, மீண்டும் அதே இடத்தில் கட்டிடம் கட்ட கட்டுமானப் பணியினை மேற்கொண்டு நான் அளித்த புகாரின் பேரில் கட்டமானப் பணி நிறுத்தப்பட்டது. இப்போது அந்த இடத்தை அவரது சொந்த இடமாக ஆக்கிரமிப்பு செய்து உபயோகம் செய்து வருகிறார்.

மரியாதைக்குரிய செயலாளர் ஆகிய தாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தினை அங்கு உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அந்த இடத்தினை முறையான ஆவணங்கள் இல்லாமல் உரிமையாளர் என்று சொல்லிக் கொண்டு இருக்கும் வெங்கடேசன் மீது நடவடிக்கை எடுத்து அந்த இடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் எடுத்து கொள்ளவும், அரசு பயன்பாட்டிற்கு அந்த இடத்தினை பயன்படுத்திக் கொள்ளவும், அதிகாரிகளுக்கு தாங்கள் உத்தரவிட வேண்டும் என பணிவுடன் தங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்."

10. இந்நிலையில், 09.06.2026 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதத்தில் மேற்கண்ட மண்டல அலுவலருக்கு நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டும் எவ்வித பதிலும் கிடைக்கப் பெறவில்லை. இருப்பினும், மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 01.09.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 29.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

11. ஆனால், இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. வெங்கடேசன் என்பவரை 01.09.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக தேவையில்லை என 31.08.2026 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

12. மனுதாரர் 01.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வசிக்கும் தெருவில் திரு. என். வெங்கடேசன் என்பவர் கதவு எண் 49ல் உள்ள பிரிக்கப்படாத சொத்தில் ஒரு பகுதியை வாங்கி அதில் 49A என்ற முகவரியிட்டு அங்கு அனுமதியில்லாமலும், சொத்து வரி செலுத்தாமலும் உள்ளார். எனவே அது குறித்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க கோரினேன், தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் மேற்கூறிய கட்டிடம் குறித்து தகவல் கோரியதில் மஞ்சக்கொல்லை தெருவில் 49A என்று மாநகராட்சி ஆவணத்தில் ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மூன்று தளங்கள் கட்டப்பட்ட இக்கட்டிடத்திற்கு மின்இணைப்பு மெட்ரோ வாட்டர் இணைப்பு எவ்வாறு கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லை.
>
> மேற்கண்ட திரு. என். வெங்கடேசன் என்பவர் மஞ்சக்கொல்லை தெருவில் கதவு எண் 47/22 என்ற முகவரியில் அஸ்திவாரம் இல்லாமல் கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றதில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை செயலாளர், திரு. என். வெங்கடேசன் அவர்களின் மனுவினை 8 வாரத்திற்குள் விசாரித்து உரிய ஆணை வெளியிடும்படி ஆணையிட்டது. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, திரு. என். வெங்கடேசன் அவர்களின் மனுவினை தள்ளுபடி செய்து பெருநகர சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்குமாறு 28.10.2024 அன்று மண்டலம் 8ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தியது. ஆனால் திரு. என். வெங்கடேசன் மேற்கண்ட கட்டிடத்தினை இடித்துவிட்டு சுற்று சுவர் கட்டி பயன்படுத்தி வருகிறார்.
>
> எனவே திரு.என்.வெங்கடேசன் அனுமதியில்லாமலும், சொத்துவரி செலுத்தாமலும் மஞ்சக்கொல்லைதெரு கதவு எண் 49Aல் கட்டப்பட்ட வீட்டின் தொடர்பாகவும், மஞ்சக்கொல்லை தெரு கதவு எண் 47/22ல் இடிக்கப்பட்ட கட்டிடத்தில் சுற்றுசுவர் கட்டியுள்ளது தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8 மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.".

13. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவிப் பொறியாளர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோர் 01.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

> "மனுதாரர் குறிப்பிட்ட சென்னை–29, அமைந்தகரை, மஞ்சக்கொல்லை தெரு, கதவு எண்.47/22ல் திரு.வெங்கடேசன் என்பவரால் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடம், தமிழக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ஆணைக்கிணங்க பெருநகர சென்னை

மாநகராட்சியால், அக்கட்டிடம் சீல் வைக்கப்பட்டு அக்கட்டிடம் இடிக்கப்பட்டது. இவ்விடத்திற்கான காலி மனை சொத்துவரி திரு.வெங்கடேசன் என்பவரால் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது அக்கட்டிடத்தின் உரிமையாளர் கட்டிடத்திற்குள் செங்கற்களை வைத்து பயன்படுத்தி வருவதாக புகார் வந்த நிலையில் அந்த இடத்தின் வகைப்பாடு குறித்து அமைந்தகரை வட்டாட்சியர் அவர்களுக்கு விவரம் கோரி கடிதம் அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் மனுதாரர் குறிப்பிட்ட அமைந்தகரை மஞ்சக்கொல்லைத் தெரு கதவு எண்.49A, என்ற முகவரியில் திரு.வெங்கடேசன் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டியுள்ளதாக வந்த புகாரின் அடிப்படையில் திரு.வெங்கடேசன் அவர்களுக்கு 31.08.2026 நாளிட்ட படிவம்–1 (Notice for production for Documents). வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் உரிமையாளர் திரு.வெங்கடேசன் இக்கட்டிடத்திற்கான சொத்து வரி ஏதும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இதுவரை செலுத்தவில்லை. எனவே, அனுமதியில்லாமல் கட்டப்பட்ட இக்கட்டிடத்தின் மீது உரிய சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''

14. புகாருக்குள்ளான இரண்டாம் எதிர்மனுதாரர் திரு எம். வெங்கடேசன் அவர்களை வழக்கு எண்.W.P No.11394 of 2023ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 30.7.2026 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஆஜராக தேவையில்லை என்று அன்னாருக்கு தெரிவிக்கப்பட்டநிலையில், இரண்டாம் எதிர்மனுதாரர் திரு எம். வெங்கடேசன் அவர்கள் 01.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு வந்து தனது தரப்பிற்கான 01.09.2026 நாளிட்ட கடிதத்தினை அளித்துள்ளார். அக்கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

With reference to your notice/letter reference no.190/மா/2026-3 dated 29.07.2026, I hereby solemnly affirm and state as follows:

The area Aminjikarai bounded behind Aminjikarai market around 2000 houses are constructed and built and living for generations all belong to sarkar porambokku lands.

Streets are ThruveadiAmman Koil Street, Manjakollai Street, Bharathipuram and Gopalakshmi colony and Kathiravan colony etc.,

Mostly all old registrations were done on land belonging to sarkar porambokku and from 2018 onwards government has stopped and henceforth there has no registration process on going for such lands.

The property door number old no.22, new no.47 was purchased from legal heirs of one Mr. Durai, who lived in that place with ground floor since 1960. Later Mr. Durai died about 25 years ago. Later his wife died on 8.10.2010and thereafter I purchased the property from legal heirs during March 2020 and unregistered with documents.

Also we shall apply to government on payable basis for patta or free patta in coming future. Still now there is no amendment for issue of patta in this area from government side.

For better development of my family members, I constructed another floor on existing one. But the petitioner with ulterior motive and vengeance got the

house demolished. To safeguard the plot I put compound wall and kept my materials. However, I request to kindly restore with temporary shed so that my right on legal be established. I have nearly paid about nearly two lakhs outstanding, water, sewerage tax and also property tax from my hard earned money which was kept unpaid by Mr. Durai and his family.

The land is still under Government Porambokku category and Government on till date has no intention to evict the entire area as it is densely populated and does not come to notice for objectionable land from government side.

I request that the compound wall not forced to be removed until all legal aspects are exercised as I have put forth my savings on this land and building and now left with nothing more.

The Petitioner Mr. Sadiq Basha is targeting only my house but all houses in this area nearly more than 1000 houses does not have any plan/approved for buildings since the land area is below 2 cents and not eligible for issuing planning CMDA approval requirements.

Regarding house site 49A, I have purchased with unregistered deed from Mr Palani and residing used by my sons and daughters. I have regularly paying water and drainage charges.

Request to kindly give me sufficient opportunity and time because I have earlier face lot of hardship and unable to bear further as it has drained all my savings. My health condition is also not excellent as earlier.

I have been given angioplasty surgery for heart problem during 2022 and still ailing with the medical treatments and medicines.

The Petitioner has left all other residents and targeting only me. We expect Government patta shcmes in coming days. A proper detailed investigation in this area is required otherwise it will leave me in great hardships. Request to kindly take up all facts and do the needful. I will abide and cooperate with all legal process.

15. இந்நிலையில், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தன்னுடைய 10.09.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"கடந்த 01.09.2026 அன்று கதவெண் 47/22 மஞ்சக்கொல்லை தெருவில் உள்ள நீதிமன்ற உத்தரவால் இடிக்கப்பட்டு மீண்டும் ஆக்கிரமிப்பில் இருக்கும் இடத்தின் சம்பந்தமாக நான் அளித்த புகாரின் மீது விசாரணைக்கு தங்களின் முன்னிலையில் ஆஜராகி விளக்கம் அளித்ததன் பேரில் தாங்கள் சம்பந்தப்பட்ட மண்டலம்–8 பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தீர்கள். அதே சமயம் வெங்கடேசன் என்பவரது ஆவணங்கள் இல்லாமல் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள 49 'A' மஞ்சக்கொல்லை தெருவில் உள்ள கட்டிடம் சம்பந்தமாக விசாரணையில் அன்று ஆஜரான உதவி செயற்பொறியாளர்–101 அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தங்களிடம் பதிலளித்தார்.

இவை எல்லாமம் மரியாதைமிகு நடுவர் அவர்கள் பதிவு செய்து விரைந்து நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்தீர்கள். அப்போது விசாரணைக்கு ஆஜரான வெங்கடேசன் தனது தரப்பில் வழக்குரைஞர் மூலம் பேச வேண்டும் என்பதற்கு, எதுவாக

இருந்தாலும் எழுதி கொடுத்துவிட்டு செல்லுங்கள் என்று ஆணையிட்டீர்கள். தற்சமயம் எனக்கு இந்த வெங்கடேசன் மற்றும் ஊர் பொதுமக்கள் ஆகியோர்களுடன் எனது வீட்டிற்கு வந்து 49 'A' மஞ்சக்கொல்லை தெருவில் உள்ள கட்டிடம் சம்பந்தமாக நான் அளித்த புகாரில் இருந்து விலகி விடுமாறு அழுத்தம் கொடுத்து வருகிறார். எனக்கு அதில் உடன்பாடு இல்லை என்று கூறியதன் அடிப்படையில் ஊர் பொதுமக்கள் அவனுக்கு சாதகமாக செயல்பட என்னை நிர்பந்தம் செய்து வருகிறார்கள். நானும் யோசித்து சொல்கிறேன் என்று கூறிவிட்டேன்.

நான் நீதிமன்ற மாண்பை மதிக்கிறவன். எனக்கு தினந்தோறும் கடிதம் கொடுத்துவிட்டாயா எனறு கேட்டுக் கொண்டுள்ளார்கள். நான் இந்த புகாரிலிருந்து விலகுவதாக இல்லை.

மரியாதைமிகு நடுவர் அவர்களிடம் நான் வைக்கும் கோரிக்கை என்னவென்றால் நான் இவர்களின் அழுத்தம் காரணமாக உதவி செயற்பொறியாளர் வார்டு–101 அவர்களுக்கு விலகல் கடிதம் கொடுக்க இருக்கிறேன். இதனை தாங்கள் மீண்டும் விசாரணைக்கு எடுத்து நான் அளித்த விலகல் கடிதத்தினை நிராகரித்து ஆவணங்கள் இல்லாமல் கட்டப்பட்டுள்ள 49 'A' மஞ்சக்கொல்லை தெருவில் உள்ள கட்டிடம் மீது நடவடிக்கை எடுக்க தாங்கள் உத்தரவிட வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் நான் அளிக்கும் விலகல் கடிதத்தை வைத்து இந்த புகாரினை முடித்து வைக்கப்பட்டதாக தங்களிடம் மண்டலம்–8 பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் அனுப்பி வைப்பார்கள். இதனை தாங்கள் கவனத்தில் கொண்டு மீண்டும் விசாரணைக்கு இந்த புகாரினை எடுத்து விசாரணை செய்து எனது விலகல் கடிதத்தை நிராகரித்து தாங்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மரியாதைமிகு. நடுவர் அவர்கள் இந்த புகாரின் மீது அளிக்கும் தீர்ப்பு இது போன்ற சட்டவிரோத கட்டிட உரிமையாளர்களுக்கும், அவர்களுக்கு துணை போகும் அதிகாரிகளுக்கும் ஒரு பாடமாகவும் முன்மாதிரியாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் இவர்களுக்கு நீதிமன்றங்களின் மீதும் முறைமன்றங்கள் மீதும் பயம் இருக்கும். எனவே மரியாதைமிகு. நடுவர் அவர்கள் எனது இந்த மனுவினை ஏற்றுக் கொண்டு நான் அளிக்கும் "விலகல்" கடிதத்தை நிராகரித்து விசாரணையின் போது முன்மாதிரியான தீர்ப்பை அளிக்க தங்களிடம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த மனுவினை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் (மண்டலம்–8 பெருநகர சென்னை மாநகராட்சி) தெரியாமல் இருக்கும்படி செய்யுமாறும், காரணம் அவர்கள் தான் புகாருக்குரியவர்களின் விவரங்களை அளிக்கிறார்கள் என்பதனையும் தங்களிடம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

16. மேலும், மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவி செயற்பொறியாளருக்கு முகவரியிட்டு, இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிட்டு அனுப்பியுள்ள 16.09.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"உதவி செயற்பொறியாளர்–101 அவர்களுக்கு, சென்னை–600 029, அமைந்தகரை, மஞ்சக்கொல்லை தெரு, கதவு எண் 49 'A' வார்டு–101க்குட்பட்ட "ஆவணங்கள் இல்லாத கட்டிடம் சம்பந்தமாக வந்த புகாரை அடுத்து தாங்கள் சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் அவர்களிடம் "அறிக்கை" கேட்டு தாக்கீது அனுப்பியிருந்தீர்கள். இது சம்பந்தமான விசாரணை கடந்த 01.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் நடுவர் அவர்களின் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது தாங்கள் விசாரணைக்கு இந்த புகார் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கூறியதன் அடிப்படையில் விரைந்து முடிக்க மரியாதைமிகு. நடுவர்

அவர்கள் தங்களுக்கு உத்தரவு பிறப்பித்தார். தற்போது தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக நான் இந்த புகாரிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்பதனை தங்களிடம் இந்த விலகல் கடிதம் வாயிலாக பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இதுவே என்னுடைய விலகல் கடிதம் ஆகும் என்பதனையும் தங்களிடம் அளிக்கிறேன்."

17 மனுதாரரின் மனுக்கள், வாக்குமூலம், கடிதங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் மண்டல அலுவலரின் அறிக்கை, உதவிப் பொறியாளர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் வசிக்கும் மஞ்சக் கொல்லை தெருவில் திரு. என். வெங்கடேசன் என்பவர் கதவு எண் 49ல் உள்ள பிரிக்கப்படாத சொத்தில் ஒரு பகுதியை வாங்கி, அதில் 49A என்ற முகவரியிட்டு அங்கு அனுமதியில்லாமலும், சொத்து வரி செலுத்தாமலும் இருந்ததால், இது குறித்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ல் கோரியுள்ளார் என்பதும், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005ன் கீழ் மேற்கூறிய கட்டிடம் குறித்து தகவல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ல் கோரியதில் மஞ்சக்கொல்லை தெருவில் 49A என்று மாநகராட்சி ஆவணத்தில் ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது என்பதும், மேலும், மேற்கண்ட திரு. என். வெங்கடேசன் என்பவர் மஞ்சக்கொல்லை தெருவில் கதவு எண் 47/22 என்ற முகவரியில் அஸ்திவாரம் இல்லாமல் கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றதில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை செயலாளர் அவர்களை திரு. என். வெங்கடேசன் என்பவரின் மனுவினை 8 வாரத்திற்குள் விசாரித்து உரிய ஆணை வெளியிடும்படி ஆணையிடப்பட்டது என்பதும், அதன்படி வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை திரு. என். வெங்கடேசன் என்பவரின் மனுவினை தள்ளுபடி செய்து பெருநகர சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்குமாறு மண்டலம் 8ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தியது என்பதும், ஆனால் திரு. என். வெங்கடேசன் மேற்கண்ட கட்டிடத்தினை இடித்துவிட்டு சுற்று சுவர் கட்டி குடோன் போல பயன்படுத்தி வருகிறார் என்பதும், எனவே திரு.என்.வெங்கடேசன் என்பவர் அனுமதியில்லாமலும், சொத்துவரி செலுத்தாமலும் மஞ்சக்கொல்லைதெரு கதவு எண் 49Aல் கட்டப்பட்ட வீட்டின் தொடர்பாகவும், மஞ்சக்கொல்லை தெரு கதவு எண் 47/22ல் இடிக்கப்பட்ட கட்டிடத்தில் சுற்றுசுவர் கட்டி குடோனாக பயன்படுத்துவது தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8 மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு கோரியிருப்பதும், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய 10.09.2026 நாளிட்ட கடிதத்தில், தான் மேற்கண்ட மனு தொடர்பாக தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக தான் இந்தப் புகாரிலிருந்து விலகிக் கொள்வதாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவி செயற்பொறியாளருக்கு அளித்த விலகல் கடிதத்தினை நிராகரிக்குமாறும், திரு. வெங்கடேசன் மற்றும் ஊர் பொதுமக்கள் தனது வீட்டிற்கு வந்து நிர்பந்தம் செய்ததால் தான் மேற்கண்ட புகார் மீதான விலகல் கடிதம் கொடுக்க இருப்பதாகவும், அதனை நிராகரித்து, தன்னுடைய புகார் மனுவான அமைந்தகரை, மஞ்சக் கொல்லைத் தெரு, கதவு எண் 49A-ல் திரு.வெங்கடேசன் என்பவர் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டியது தொடர்பாக நடவடிக்கை எடுக்க உரிய உத்தரவு வழங்கும்படி கோரியிருப்பது மனுதாரின் மனுக்கள், வாக்குமூலம் மற்றும் கடிதங்கள் ஆகியவற்றின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ஆணையின்படி, மனுதாரர் குறிப்பிட்ட சென்னை–29, அமைந்தகரை, மஞ்சக்கொல்லை தெரு, கதவு எண்.47/22ல் திரு.வெங்கடேசன் என்பவரால் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தினை பெருநகர

சென்னை மாநகராட்சியால் சீல் வைக்கப்பட்டு இடிக்கப்பட்டது என்பதும், இவ்விடத்திற்கான காலி மனை சொத்துவரி திரு.வெங்கடேசன் என்பவரால் செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், தற்போது அக்கட்டிடத்தின் உரிமையாளர் கட்டிடத்திற்குள் செங்கற்களை வைத்து பயன்படுத்தி வருவதாக புகார் வந்த நிலையில் அந்த இடத்தின் வகைப்பாடு குறித்து அமைந்தகரை வட்டாட்சியரை கடிதம் மூலம் கோரப்பட்டு, வட்டாட்சியரிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் மற்றும் அமைந்தகரை, மஞ்சக் கொல்லைத் தெரு, கதவு எண் 49A-ல் திரு.வெங்கடேசன் என்பவர் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டியது தொடர்பாக திரு.வெங்கடேசன் என்பவருக்கு 31.08.2026 நாளிட்ட படிவம்–1 (Notice for production for Documents). வழங்கப்பட்டுள்ளது என்பதும், இக்கட்டிடத்திற்கான சொத்து வரி ஏதும் கட்டிட உரிமையாளரால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இதுவரை செலுத்தவில்லை என்பதும், எனவே, அனுமதியில்லாமல் கட்டப்பட்ட இக்கட்டிடத்தின் மீது உரிய சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் மண்டல அலுவலரின் அறிக்கை, உதவிப் பொறியாளர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ஆணையின்படி, மனுதாரர் குறிப்பிட்ட சென்னை–29, அமைந்தகரை, மஞ்சக்கொல்லை தெரு, கதவு எண்.47/22ல் திரு.வெங்கடேசன் என்பவரால் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தினை சீல் வைக்கப்பட்டு இடிக்கப்பட்ட, அக்கட்டிடத்தில் அதன் உரிமையாளர் கட்டிடத்திற்குள் செங்கற்களை வைத்து பயன்படுத்தி வருவதாக புகார் வந்த நிலையில் அந்த இடத்தின் வகைப்பாடு குறித்து அமைந்தகரை வட்டாட்சியரிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மற்றும் அமைந்தகரை, மஞ்சக் கொல்லைத் தெரு, கதவு எண் 49A-ல் திரு.வெங்கடேசன் என்பவர் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டியது தொடர்பாக திரு.வெங்கடேசன் என்பவருக்கு 31.08.2026 நாளிட்ட படிவம்–1 (Notice for production for Documents). வழங்கப்பட்டுள்ளது என்றும், இக்கட்டிடத்திற்கான சொத்து வரி ஏதும் கட்டிட உரிமையாளரால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இதுவரை செலுத்தவில்லை என்பதும், அனுமதியில்லாமல் கட்டப்பட்ட இக்கட்டிடத்தின் மீது உரிய சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவிப் பொறியாளர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறும், மனுதாரர் தன்னுடைய மேற்கண்ட புகார் குறித்து தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக விலகிக் கொள்வதாகவும் மற்றும் திரு. வெங்கடேசன் மற்றும் ஊர் பொதுமக்கள் அதிகாரிகளுடன் மனுதாரர் வீட்டிற்கு வந்து நிர்பந்தம் செய்ததால் தான் மேற்கண்ட புகார் மீதான விலகல் கடிதம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் உதவி செயற் பொறியாளருக்கு கொடுத்ததாகவும், அவ்வாறு அளித்த விலகல் கடிதத்தினை நிராகரித்து, தன்னுடைய புகார் மனுவான அமைந்தகரை, மஞ்சக் கொல்லைத் தெரு, கதவு எண் 49A-ல் திரு.வெங்கடேசன் என்பவர் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டியது தொடர்பாக நடவடிக்கை எடுக்க உரிய உத்திரவு வழங்கும்படி தன்னுடைய 10.09.2026 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள நிலையில், சென்னை–29, அமைந்தகரை, மஞ்சக்கொல்லை தெரு, கதவு எண்.47/22ல் திரு.வெங்கடேசன் என்பவரால் அனுமதியில்லாமல் கட்டப்பட்டு பின்னர் அக்கட்டிடம் இடிக்கப்பட்ட இடத்தில் செங்கற்களை வைத்து குடோன் போல பயன்படுத்தி வருவது தொடர்பாக அவ்விடத்தின் வகைப்பாடு குறித்து அமைந்தகரை வட்டாட்சியரிடமிருந்து அறிக்கையினை விரைவில் பெற்று அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும், அமைந்தகரை, மஞ்சக் கொல்லைத் தெரு, கதவு எண் 49A-ல் திரு.வெங்கடேசன் என்பவர் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 மற்றும் கட்டிட திட்ட அனுமதியினை மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து, மாண்பமை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி உரிய சட்டபூர்வ

நடவடிக்கை மேற்கொள்ளவும், மண்டலம் 8–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும், மேற்கண்ட தெருவில் கதவு எண் 49A தொடர்பான மனுதாரரின் புகார் குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை ஏதும் விசாரணை நாள் வரை சமர்ப்பிக்காமலும், இக்கட்டிடம் தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்திற்கு விசாரணைக்கு அழைத்த பின் விசாரணைக்கு ஒரு நாள் முன்பு, அதாவது 31.08.2026 நாளிட்ட படிவம்–1 (Notice for production for Documents) காலம் தாழ்த்தி வழங்கி மெத்தனமாக செயல்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணைவெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. ர. சாஜித் பாஷா,
கதவு எண் 45/28,
மஞ்சக் கொல்லை தெரு,
அமைந்தகரை, சென்னை–600 029,

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
36பி, புல்லா அவின்யூ, ஷெனாய் நகர்,
சென்னை–600 030.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர். 13/10/26